வேம்பு

1. **தேயிலைக் கொசு நாவாய்ப்பூச்சி, ஹலோபெல்டிஸ் ஆன்டனி**

**சேதத்தின் அறிகுறி:**

- இளம் குஞ்சுகளும், பூச்சிகளும் சூரியன் மறைந்த பின்பு தாவர திசுக்களில் உள்ள சாற்றை உறிஞ்சும்
- இலைகளும், கிளைகளும் காய்ந்துவிடும்
- தாக்கப்பட்ட கிளைகள் எரிந்ததுபோல் காணப்படும்
- இலைகளின் நுனிகள் காய்ந்து காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- பூச்சி கருப்பு நிறமாகவும் சிவந்த கழுத்தை உடையதாகவும், பழுப்பு நிற இறக்கையுடனும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- என்டோசல்பான் / பாசலோன் / மோனோகுரோட்டோபாஸ் 2 மி.லி / லிட்டர் நீரில் கரைத்து சாயங்காலத்தில் தெளித்தால் நல்ல பலன் கிடைக்கும்